

கழகத் துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர், தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார். உடன் கழக வர்த்தக அணிச் செயலாளர் காசி முத்து மாணிக்கம், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், கழக கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத் தலைவர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், கழக வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர் ஆகியோர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் மற்றும் பொது நூலக இயக்ககம் இணைந்து ஒருங்கிணைத்த தூத்துக்குடி வ.உ.சி. கலைக் கல்லூரியில் நடைபெற்ற பொருநை இலக்கியத் திருவிழா 2025 ல் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் திருமதி பெ. கீதாஜீவன் கலந்து கொண்டு உரையாற்றினார். உடன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் இளம் பகவத்,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான், மாநகராட்சி ஆணையர் மதுபாலன், அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் முதன்மை நூலகர் மற்றும் தகவல் அலுவலர் முனைவர்.காமாட்சி, மாவட்ட வன அலுவலர் ரேவதி ரமன், வருவாய் கோட்டாட்சியர் பிரபு உள்ளிட்டோர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் எழுதிய

# ‘கின்னஸ் கலைஞர்’ புத்தகங்கள் - அமைச்சர் துரைமுருகன் வெளியிட்டார்!

## குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் - செஸ் சாம்பியன் குகேஷ் பெற்றுக்கொண்டனர்!

சென்னை, ஜன.05-

அமைச்சர் மா.சுப்பிரமணியன் எழுதிய கின்னஸ் கலைஞர் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) புத்தகங்களை அமைச்சர் துரைமுருகன் வெளியிட தமிழ் பிரதியை குன்றக்குடி அடிகளார் மற்றும் ஆங்கிலப் பிரதியை உலக சதுரங்க சாம்பியன் குகேஷ் பெற்றுக்கொண்டனர். அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏற்புரையாற்றினார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் - சென்னை தெற்கு மாவட்ட தி.மு.கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் எழுதிய“கின்னஸ் கலைஞர்” - (தமிழ்) மற்றும் கின்னஸ் கலைஞர் (ஆங்கிலம்) ஆகிய இரு நூல்கள் 4-1-2025 அன்று சென்னை, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் நடைபெற்ற புத்தகக் காட்சி அரங்கில் வெளியிடப்பட்டது. இதன் தமிழ் பிரதியை தலைமையேற்று நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வெளியிட முதல் பிரதியை மேனாள் காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் சைலேந்திரபாபு பெற்றுக்கொண்டார். ஆங்கில நூலின் முதல் பிரதியை உலக சதுரங்க சாம்பியன் குகேஷ் பெற்றுக்கொண்டார்.

திருவண்ணாமலை ஆதீன குருமகா சன்னிதானம் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் மற்றும் இந்து நாளேட்டின் மேனாள் ஆசிரியர் என்.ராம் ஆகியோர் வாழ்த்துரை நல்கிட, நூலாசிரியர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நன்றி கூறி ஏற்புரையாற்றினார்.

முன்னதாக எமரால்டு பதிப்பக உரிமையாளர் முனைவர் கோ.ஒளிவண்ணன் வரவேற்புரையாற்றினார். திருமகள் நிலைய உரிமையாளர் டாக்டர் பழனியப்பன் முன்னிலையேற்று உரையாற்றினார். கவிஞர் இளையகம்பன் நிகழ்ச்சி யை தொகுத்து வழங்கினார். இதுவரை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஒன்பது நூல்களை எழுதியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் “சூரியன் பெற்ற சுழல் பூமி” எனும் இவரது முதல் நூலானது. முதல்வர் தளபதி அவர்களின் 60ஆம் அகவையை முன்னிட்டு 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாடு தழுவிய கவிதைப் போட்டி நடத்தி, ஆயிரக்கணக்கான கவிதைகளுள், சிறப்பான 60 கவிதைகளைத் தேர்வு செய்து இந் நூல் உருவானது.

அதைப் போலவே “வரலாறாய் வாழ்பவர்” நூலும் மிகுந்த சிறப்புக்குரியது. “முத்தமிழ் அறிஞர்” கலைஞரின் (90 ஆம் அகவையை முன்னிட்டு உலகமெல்லாம் உள்ள தமிழர்கள் தமிழறிஞர்கள் மத்தியில் கவிதைப் போட்டி ஒன்றை நடத்தி. தமிழின் சிறந்த கவிஞர்கள் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளைத் தொகுத்து, நம் மாண்பமை முதல்வர் தளபதி அவர்களின் முன்னுரையுடன் 2014ஆம் ஆண்டு அந்த நூலை மா.சுப்பிரமணியன் நமக்கு வழங்கினார்.

அதைத்தொடர்ந்து மா.சுப்பிரமணியன் 2017-இல் படைத்த மகத்தான ஒரு படைப்புதான் “மேயர் பதவியல்ல பொறுப்பு!” எனும் நூல். சென்னைப் பெருநகரத்தின் மேயராகப் பொறுப்பேற்று, அக்காலக் கட்டங்களில் நடைபெற்ற சென்னைக்கான பணிகளின் சிறப்பை எடுத்து விளக்கும் நூலாய் இது வெளியிடப்பட்டது. முதல்வர் தளபதி அவர்களின் வாழ்த்துரையுடன் உருவான இந்நூல், எமரால்டு பதிப்பகத்தின் வெளியீடாக வெளிவந்து இன்றுவரை பல லட்சம் பிரதிகள் விற்கப்பட்ட நூலாக இது விளங்குகிறது. சென்னைப் புத்தகக் காட்சியில் வெளியிடப்பட்ட இந்நூலின் முதல் பிரதியை திரைப்பட இயக்குனர் பா.ரஞ்சித் வெளியிட முதல் பிரதியை பேராசிரியர் சுப. வீரபாண்டியன் பெற்றுக்கொண்டு விழாவைச் சிறப்பித்தார்.

மா.சுப்பிரமணியன் அவர்களின் மற்றொரு நூல் “ஓடலாம் வாங்க” எனும் உன்னதமான நூல். 2021 ஒய்.எம்.சி.ஏ., புத்தகக் காட்சியில் இன்றைய தமிழ்நாட்டின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் வெளியிடப்பட்ட இந்நூலின் முதல் பிரதியை, இந்திய ஹாக்கி அணியின் மேனாள் தலைவர் பாஸ்கரன் பெற்றுக்கொண்டார்.

உலகமெலாம் நடத்தப்பட்ட 125 மாரத்தான் ஓட்டங்களில் பங்கேற்று, அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெற்ற அனுபவங்களும் முன்னெடுப்புகளும் இந்நூலில் விரிவாக வழங்கப்பட்டிருக்கிறது. இளம் தலைமுறைக்கும்எதிர்கால தலைமுறைக்கும் உடலை மனதை வலிமையோடு வைத்துக்கொள்வதற்கான ஒரு பாடநூலாக இந்நூல் திகழ்கிறது. இந்நூலையும் எமரால்டு பதிகத்தின் நிறுவனர் கோ.ஒளிவண்ணன் அவர்களே பதிப்பித்து சிறப்பு செய்தார்.

“ஓடலாம் வாங்க” நூலின் ஆங்கிலப் பதிப்பாக Come lets Run எனும் படைப்பு, 2023ஆம் ஆண்டு இதே YMCA புத்தகக்காட்சி அரங்கில் வெளியிடப்பட்டது.

நூலின் முதல் பிரதியை இந்திய கிரிக்கெட் அணியின் மேனாள் கேப்டன் ஸ்ரீகாந்த் அவர்கள் வெளியிட மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்தின் இயக்குனர் சிசில் சுந்தர் முதல்படியைப் பெற்றுச் சிறப்பித்தார். அறிஞர்களும் சமூகச் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை நல்கிய இந்நூலையும் எமரால்டு பதிப்பகமே பதிப்பித்தது.

கொரோனா உச்சதில் இருந்த காலகட்டத்தில் 2021-ல் ஆட்சிப் பொறுப்பேற்ற முதல்வர் தளபதி அவர்களின் தலைமையிலான கழக அரசின் ஓயாத கொரோனா ஒழிப்புப் பணிகளையும் மருத்துவ முன்னெடுப்புகளையும் கொரோ னாவிலிருந்து நாட்டு மக்களைக் காத்த அரும்பணிகளையும் விளக்கும் சிறப்பான நூலாய், 2024ஆம் ஆண்டு முதல்வர் தளபதி அவர்களின் முன்னுரை யோடு “கொரோனா உடல் காத்தோம் உயிர் காத்தோம்” எனும் நூலினை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியான இந்நூல் அமைந்தது.

ஒய்.எம்.சிஏ., புத்தகக் காட்சி அரங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில், தமிழ்நாட்டின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டா லின் அவர்கள் வெளியிட, தமிழ்ப் படியை இந்துக் குழுமத்தின் தலைவர் என்.ராம் பெற்றுக்கொண்டார். ஆங்கிலப் படியை மருத்துவர் மோகன் காமேஸ்வரன் அவர்கள் பெற்றுக்கொண்டார். நூலின் தமிழ் ஆக்கத்தை திருமகள் நிலையமும், ஆங்கில வடிவத்தை எமரால்டு பதிப்பகமும் வெளியிட்டு மகிழ்ந்தன.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதிமாறன், தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் நக்கீரன் கோபால் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

அந்தப் பெரும் படைப்பின் வியப்பில் இருந்து நாம் மீள்வதற்குள்... இதோ “கின்னஸ் கலைஞர்” எனும் கம்பீரமான நூலை நமக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கியுள்ளார்.

4.1.2025 அன்று ஒய்.எம்.சி.ஏ., புத்தகக்காட்சி அரங்கில் வெளியிடப்பட்ட இந் நூல்... முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பெயரில் “கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான்களின் சாதனை விளக்க நூலாக வெளியிடப்பட்டது.

இந்த நான்கு மாரத்தான் ஓட்ட நிகழ்வுகளி லிருந்து சேவை வரி நீங்கலாகப் பெறப்பட்ட ரூபாய் 5 கோடியே 43 லட்சத்து 96 ஆயிரத்து 869 ரூபாயினை மருத்துவ சேவைப் பணிகளுக்காக, எப்படி முத்தமிழறிஞர் கலைஞர் தாம் வாழ்ந்த இல்லத்தை மருத்துவமனைக்கு வழங்கச் சொல்லியிருக்கிறோ, அதே போல அவரது நினைவால் நடத்தப்பட்ட மாரத்தான்களின் ஒட்டுமொத்த நிதியையும் மருத்துவ செய ல் பாட்டிற்கே வழங்கியிருக்கிறார் அமைச்சர் மா.சுப்பிரமணியன்.

இம்மாரத்தான்களில் உலக அரங்கில் நிகழப் பெற்ற கலைஞர் நினைவுப் பன்னாட்டு மாரத்தான்களின் வரலாற்றுச் சிறப்புகளை வியக்க வியக்கச் சொல்லி நம்மை திகைப்பில் ஆழ்த்தியிருக்கிறார். மெய்நிகர் மாரத்தான்கள் இரண்டு, ஆசிய புக் ஆஃப் ரெக்கார்ட்சில் இடம் பெற்ற மாரத்தான் ஒன்று, கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்ற மாரத்தான் ஒன்று என நான்கு மாரத்தான் நிகழ்வுகளின் தொகுப்பாய் இந் நூல் உருவாகி இருக்கிறது. அதுமட்டுமல்லாது கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தையும் இது உள்ளடக்கி இருக்கிறது.

### மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில்,

# பெரம்பலூர் மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டம்!

## எம். பிரபாகரன் எம்.எல்.ஏ. – தங்க.சித்தார்த்- ஏ.கே.அருண் பங்கேற்பு!

பெரம்பலூர், ஜன. 6 -

பெரம்பலூர் மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் , சட்டமன்ற உறுப்பினர் எம் பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள்.

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், எஸ். அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், அழகு.நீலமேகம்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன்,சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், துணை பெருந்தலைவர் எம்.ரெங்கராஜ்,

மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர். வேணுகோபால், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், டி.ஆர்.சிவசங்கர்,

ஆர்.அருண், மா.பிரபாகரன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் பேரவை செயலாளர் ஆர். ரெங்கசாமி,

மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எ.ரசூல் அகமது, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர்.முத்தரசன்,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ.கார்மேகம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க. கமல், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ.ரமேஷ் , பேரூர் கழக செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், மாவட்ட கலை இலக்கிய பேரவை துணை அமைப்பாளர் ந.முத்துச்செல்வன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வான் புகழ் வள்ளுவருக்கு சிலை அமைத்து 25 ஆண்டுகள் முடிவடைந்து, அதன் வெள்ளி விழாவை முன்னிட்டு, கடலுக்கு மேல் கண்ணாடி பாலம் அமைத்துத்தந்த,

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தும்,

பெரம்பலூரில் நடைபெற்ற திருச்சி மண்டல அளவிலான ஆதிதிராவிடர் நலக்குழு மண்டல ஆய்வுக் கூட்டத்திற்கு கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், ஆதிதிராவிடர் நலக்குழு அமைச்சர் ம.மதிவேந்தன் மற்றும் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்தும்,

2026 சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெறுவதற்கு, அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLC) நியமனம் செய்து மாவட்ட கழக அலுவலகத்தில் பட்டியல் ஒப்படைக்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



திருப்பத்தூர் மாவட்டம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் ஜோலார்பேட்டை சிறு விளையாட்டு மைதானத்தில் நடைப்பெற்ற மாவட்ட அளவிலான அறிஞர் அண்ணா நினைவு மிதிவண்டி போட்டியை மாவட்ட கழக செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் ஜோலார்பேட்டை நகர செயலாளர் ம.அன்பழகன், ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் க.உமாகன்ரங்கம், ஜோலார்பேட்டை நகர மன்ற துணைதலைவர் இந்திரா பெரியார்தாசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு. தம்பையா

### சனவரி 6 (2023)



**கழகம் தொடங்கிய நாள் முதலே உறுப்பினராகி, கழகத்தின் சார்பில் மன்றம், படிப்பகம் தொடங்கி கழகக் கொள்கைகளை தனது பகுதியில் பரப்பியதோடு, அதில் இரவு பாடசாலை நடத்தியவர்.**

**பகுதி பிரதிநிதி, இரு முறை வட்டச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்ததோடு, முத்தமிழறிஞர் கலைஞர் சைதை தொகுதியில் போட்டியிட்டபோது, அவரது வெற்றிக்கு பாடுபட்டவர்.**

**பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்கு பின்னர் சைதை தொகுதியில் முதன்முதலாக சிலை வைத்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி. மாயவன்

### சனவரி 6 (1998)



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**கடலூர் மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.**

**1967 மற்றும் 1971 ஆகிய இரண்டு முறை சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மக்களவை உறுப்பினராக பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**